O.S.No.91/2023 தேதி – 13.02.2025

வா.சா.1. –கவிதா

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –

என் கணவர் வழக்கமாக குளிப்பதற்காக மோகன்ராஜ் என்பவரின் பம்ப் செட்டிற்கு செல்வார் என்றால் சரிதான். அதனால் மோகன்ராஜின் தோட்டம் பற்றி என் கணவருக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். என் கணவருக்கு தென்னை மரத்தை சுற்றி ஜி ஐ கம்பி சுற்றியிருந்தது தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்த அன்று என் கணவர் காலை 05.00 மணிக்கு குளிக்கச்சென்றதாக உள்ளூரில் விசாரித்தபோது தெரியவந்தது என்றால் சரியல்ல, காலை 06.00, 06.30 மணிக்கு தான் சென்றார். சம்பவத்தன்று இடி, மின்னல், மழை இருந்ததா என்றால் சம்பவத்திற்கு முதல் நாள் மழை பெய்தது, இடி, மின்னல் இல்லை. மழை பெய்த சமயத்தில் ஊரில் தடையில்லாமல் மின்சார விநியோகம் இருந்தது என்றால் சரிதான். சம்பவம் பற்றி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை. மின்சார வாரியத்திலிருந்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தனர். மேற்படி புகாரின் அடிப்படையில் மோகன்ராஜ் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மின்சார வாரிய அதிகாரி மேல் எந்த வழக்கும் இல்லை என்றால் சரிதான். மின்சார வாரிய அதிகாரிகள் மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மோகன்ராஜ் பம்ப் செட்டில் பல்ப் இருந்த இடத்தில் கோல்டர் மாட்டி ஜி ஐ கம்பிக்கு மின் விநியோகம் பொருத்தியிருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் கணவர் காலை 05.00 மணிக்கு குளிக்கச்சென்றபோது, தடுமாறி விழுந்து ஜி ஐ கம்பியில் மின்சாரம் தாக்கி இறந்துவிட்டார் என்றால் சரியல்ல, காலை 06.00 மணிக்கு மேல் தான் சென்றார். மின்சார வாரியத்திற்கு தெரியாமலேயே ஜி ஐ கம்பியை மரத்தில் சுற்றியுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த சம்பவத்தினால் மோகன்ராஜின் பம்ப் செட்டின் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டு 2 வருடம் ஆகிறது என்றால் அதுபற்றி தெரியாது. மோகன்ராஜிற்கு மின்சார வாரியம்

விதிப்படி தான் மின் இணைப்பு கொடுத்தது என்றும், ஆனால் மோகன்ராஜ் தான் அதை தவறாக பயன்படுத்திக் கொண்டார் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. மாதந்தோறும் மின் தடை செய்து பராமரிப்பு பணிகள் செய்வார்கள் என்றால் வீடுகளுக்கு மட்டும் பண்ணுவது தான் தெரியும். காடுகளுக்கு பராமரிப்பு செய்வது தெரியாது. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்திலேயே மோகன்ராஜ் தான் ஜி ஐ கம்பியை மரத்தில் சுற்றி என் கணவருக்கு இறப்பை ஏற்படுத்தியுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனால் 1ம் பிரதிவாதி தான் நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் தினசரி ரூபாய் 1000 சம்பாதித்து வந்தார் என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் இறந்தது சம்மந்தமாக அரசிடம் எதுவும் நஷ்டஈடு வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. அரசிடம் நஷ்டஈடு கோரி மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் இறந்தவுடன் மோகன்ராஜ் தரப்பில் எனக்கு நஷ்டஈடு கொடுப்பது சம்மந்தமாக என்னிடம் பேசினார்களா என்றால் இல்லை. மோகன்ராஜ் தவறு செய்ததன் காரணமாகத்தான் என் கணவர் இறந்துவிட்டார் என்பதால் 1ம் பிரதிவாதி தான் நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்றும், 2ம் பிரதிவாதி தரப்பில் எவ்வித நஷ்டஈடும் கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியை பொறுத்தவரை வழக்கு தேவையற்றது என்றும், வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் சரியல்ல, இருவரும் தான் பொறுப்பு.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>